# 4

# மீட்பின் திட்டம்!

**(Patriarchs and Prophets, pp. 63–70)**

மனிதனின் விழுகை, பரலோகம் முழுவதையும் வருத்தத்தால் நிரப்பியது. தேவன் உண்டாக்கின உலகம், பாவத்தின் சாபத்தால் வியாதிப்பட்டு, துயரத்துக்கும் சாவிற்குமென்று விடப்பட்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. பிரமாணங்களை மீறியவர்களுக்கு தப்பிக்க வழியே இல்லாததுபோலத் தோன்றியது. தூதர்கள் தங்கள் துதியின் கீதங்களை நிறுத்தினார்கள். பரலோக பிராகாரம் முழுவதிலும் பாவம் கொண்டுவந்த அறிவைக்குறித்த புலம்பல் இருந்தது. (1)

தேவனுடைய குமாரன்—பரலோகத்தில் மகிமையான சேனாதிபதி, விழுந்துபோன இனத்தின்மேல் கொண்ட பரிதாபத்தினால் தொடப்பட்டார். தொலைந்துபோன உலகத்தின் துக்கம் அவர்முன்பாக எழுந்தபோது, நித்தியமான இரக்கத்தினால் அவருடைய இருதயம் அசைக்கப்பட்டது. எனவே தெய்வீக அன்பு, மனிதன் மீட்கப்படும்படியான ஒரு திட்டத்தை உருவாக்கியது. மீறப்பட்ட பிரமாணம் பாவியின் உயிரை கோரியது. அண்டசராசரத்திலும் மனிதனுக்காக நின்று அதனுடைய கோரிக்கையை திருப்திப்படுத்தக்கூடிய ஒரே ஒருவர் இருந்தார். தெய்வீகப் பிரமாணம் தேவனைப்போலவே பரிசுத்தமானதாகையால், தேவனுக்கு இணையான ஒருவர்தான், அதை மீறினதற்கான பரிகாரத்தைச் செய்யமுடியும். கிறிஸ்து மாத்திரமே விழுந்துபோன மனிதனை பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டெடுத்து மீண்டும் அவனை பரலோக இசைவிற்குள்ளாகக் கொண்டுவரமுடியும். பிதாவையும் குமாரனையும் கட்டாயமாக பிரிக்குமளவு பரிசுத்த தேவனுக்கு அருவருப்பாயிருந்த பாவத்தின் குற்றத்தையும் அவமானத்தையும் கிறிஸ்து தம்மீது எடுத்துக்கொள்ளுவார். கேடடைந்த இனத்தை மீட்டெடுக்க கிறிஸ்து துயரத்தின் ஆழங்களுக்குச் செல்லுவார். (2)

வார்த்தைகளால் வருணிக்கக்கூடாத ஊக்கமான ஆர்வத்தோடு இதன் முடிவிற்காக பரலோக சேனை காத்திருந்தபோது, பிதாவின் முன்பாக பாவியின் சார்பாக அவர் மன்றாடினார். விழுந்துபோன மனிதர்களுக்காக

நடந்த மறைவான சம்பாஷணையான சமாதானத்தின் ஆலோசனை (சகரியா 6:13), வெகுநேரம் தொடர்ந்தது. பூமி உருவாக்கப்படுமுன்பாகவே இரட்சிப்பின் திட்டம் வகுக்கப்பட்டது. கிறிஸ்து "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" (வெளி. 13:8)யாக இருக்கிறார்; என்றபோதும், குற்றமுள்ள இனத்திற்காக மரிக்கும்படி தமது குமாரனை ஒப்புக்கொடுப்பது அண்டசராசரத்தின் அதிபதிக்கே ஒரு போராட்டமாக இருந்தது. ஆனாலும் "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16). இந்த மீட்பின் இரகசியம்! தன்னை நேசிக்காத ஒரு உலகத்தின்மேலிருந்த தேவனுடைய அன்பு! புத்திக்கு எட்டாத"இந்தஅன்பின் ஆழத்தை எவரால் அறிந்துகொள்ளக்கூடும்? முடிவில்லாத யுகங்களாக, புரிந்துகொள்ளக்கூடாத அந்த அன்பைப் புரிந்துகொள்ள ஆசிக்கிற அழிவில்லாத மனங்கள் வியந்து வணங்குவார்கள். (3)

"உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்குவதில்" (2 கொரி. 5:19) தேவன் கிறிஸ்துவில் வெளிப்படவேண்டும். பாவத்தினால் மனிதனின் தரம் தாழ்ந்துபோனதால், அவனால் தானாகவே தூய்மையும் நன்மையும் கொண்டவரோடு இணங்குவது கூடாத காரியம். ஆனால் பிரமாணத்தின் ஆக்கினையிலிருந்து மனிதனை மீட்டெடுத்தபின்பு, மனித முயற்சிகளோடு இணைந்து செயல்பட கிறிஸ்துவால் அவனுக்குத் தெய்வீக வல்லமையை வழங்கமுடியும். இவ்வாறாக, தேவனிடம் மனந்திரும்புவதன்மூலமாகவும், கிறிஸ்துவை விசுவாசிப்பதன்மூலமாகவும், விழுந்துபோன ஆதாமின் பிள்ளைகள் மீண்டும் ஒருமுறை "தேவனுடைய பிள்ளைகள்" (1 யோவான் 3:2) ஆகலாம். (4)

மனிதனுடைய இரட்சிப்பை உறுதிப்படுத்தும் திட்டம் அதன் நித்தியமான தியாகத்தினால் பரலோகம் முழுவதையும் ஈடுபடுத்தியது. கிறிஸ்து மீட்பின் திட்டத்தை தூதர்கள்முன் திறந்துகாட்டியபோது, அவர்களால் களிகூரமுடியவில்லை. மனிதனின் இரட்சிப்பு தங்களுடைய அன்பான அதிபதிக்கு சொல்லவொண்ணா ஆபத்தைக் கொண்டுவரும் என்கிறதை அவர்கள் கண்டனர். தாம் எவ்வாறு பரலோகத்தின் தூய்மை மற்றும் சாமாதானத்திலிருந்தும், அதன் மகிழ்ச்சி மகிமை மற்றும் நித்திய வாழ்விலிருந்தும் கீழிறங்கி, தாழ்ந்துபோன பூமியின் துக்கத்தையும் அவமானத்தையும் மரணத்தையும் சகிக்கும்படி அதோடு தொடர்பு கொள்ளவேண்டும் என்று அவர் அவர்களுக்குக் கூறினபோது, துயரத்தோடும் வியப்போடும் அவர்கள் கவனித்தனர். அவர் பாவிக்கும்,

பாவத்தின் தண்டனைக்கும் இடையே நிற்கவேண்டியதிருந்தது. என்றாலும் சிலரே அவரை தேவகுமாரனாக ஏற்றுக்கொள்ளுவார்கள். பரலோகத்தின் மகத்துவமானவர் என்கிற தமது தகுதியை விட்டுவிட்டு, பூமியின்மேல் காணப்பட்டு, மனிதனாகத் தம்மைத் தாழ்த்தி, மனிதன் தாங்கவேண்டியதிருக்கிற துக்கங்கள் சோதனைகளோடு தமது சொந்த அனுபவத்தினாலே அவர் அறிமுகமாவார். சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராகும்படி (எபி. 2:18) இவையெல்லாம் தேவையாயிருக்கும். ஒரு போதகராக அவருடைய ஊழியம் முடிவடையும்போது, துன்மார்க்கரின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, செய்யும்படி சாத்தானால் ஏவப்படக்கூடிய ஒவ்வொரு அவமானத்திற்கும் உபத்திரவத்திற்கும் உட்படுத்தப்படுவார். மிகக் குற்றமுள்ள பாவியைப்போல பரலோகத்திற்கும் பூமிக்குமிடையே உயர்த்தப்பட்டு, மிகக்கொடூரமான மரணத்தை அவர் அடையவேண்டும். தூதர்கள், கண்களால் சகிக்கக்கூடாதபடியால் தங்கள் முகங்களை அந்தக் கட்சியிலிருந்து மூடிக்கொள்ளுகிறதற்கேதுவான ஒரு வேதனையை அவர் அநேக மணிநேரங்கள் கடந்துவரவேண்டும். மீறுதலின் குற்றம்—முழு உலகத்தின் பாவப்பாரம்—தம்மேல் தங்கும்போது, பிதாவின் முகம் மறைக்கப்பட அவர் ஆத்தும வியாகுலத்தை அடையவேண்டும். (5)

தூதர்கள் தங்களுடைய அதிபதியின்முன் விழுந்து மனிதனுக்காக தங்களை தியாகம்செய்ய அர்ப்பணித்தார்கள். ஆனால் தூதர்களின் ஜீவன் பாவக்கடனை செலுத்தக்கூடாது. மனிதனை சிருஷ்டித்தவர்தான் அவனை மீட்கும் வல்லமையைப் பெற்றிருந்தார். என்றாலும் மீட்பின் திட்டத்தில் செயல்பட தூதர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. கிறிஸ்து "மரணத்தை ருசிபார்க்கும்படி தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்படுவார்" (எபி. 2:9). அவர் தம்மீது மனித இயல்பை எடுத்துக்கொள்ளும்போது, அவருடைய பலம் அவர்களுடைய பலத்துக்கு இணையாக இருக்காது. அப்போது அவரைப் பலப்படுத்தவும், அவருடைய பாடுகளில் அவரை ஆற்றவும் அவர்கள் அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களுக்கு ஊழியஞ்செய்ய அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாகவும்" (எபி. 1:14), அவர்கள் இருக்கவேண்டும். கிருபைக்கு உட்பட்டவர்களை தீய தூதர்களின் வல்லமையிலிருந்தும், அவர்களைச் சுற்றிலும் சாத்தானால் நிலையாக வீசப்படும் இருட்டிலிருந்தும் பாதுகாக்கவேண்டும். (6)

தூதர்கள் தங்களுடைய ஆண்டவரின் வேதனையையும் சிறுமை யையும் காணும்போது, துக்கத்தாலும் கோபத்தாலும் நிறைந்து கொலை செய்கிறவர்களிடமிருந்து அவரை மீட்க விரும்புவார்கள். ஆனால் தாங்கள் காணவேண்டியிருக்கிற எதையும் தடுப்பதற்காக அவர்கள் குறுக்கே

வரக்கூடாது. கிறிஸ்து துன்மார்க்கருடைய வெறுப்பையும் கொடுமையையும் அனுபவிக்க வேண்டுமென்பது மீட்பின் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மனிதனின் மீட்பராக ஆனபோது, இவையெல்லாவற்றிற்கும் அவர் சம்மதித்தார். (7)

தமது மரணத்தினாலே அநேகரைக் காப்பாற்றி மரணத்தின்மேல் அதிகாரம் கொண்டிருந்தவனை அழிப்பேன் என்று கிறிஸ்து தூதர்களுக்கு உறுதிகொடுத்தார். மீறுதலினால் மனிதன் இழந்துபோன இராஜ்யத்தை மீட்பார். மீட்கப்பட்டவர்கள் அவரோடுகூட அதை சுதந்தரித்து, என்றென்றும் அங்கே வசிப்பார்கள். பாவமும் பாவிகளும் பரலோகத்திலும் பூமியிலும் இருக்கும் சமாதானத்தை ஒருபோதும் தொந்தரவு செய்யக்கூடாதபடி அழிக்கப்படுவார்கள். அவருடைய பிதா ஏற்றுக்கொண்ட திட்டத்திற்கு இசைவாயிருக்கும்படியும், அவரது மரணத்தினாலே விழுந்துபோன மனிதன் தேவனோடு ஒப்புரவாக்கப்படமுடியும் என்பதால் மகிழ்ந்திருக்கும்படியும் அவர் தூதர் சேனையை அழைத்தார். (8)

அப்போது மகிழ்ச்சி, விவரிக்கமுடியாத மகிழ்ச்சி பரலோகத்தை நிரப்பியது. மீட்கப்படப்போகிற ஒரு உலகத்தின் மகிமையும் பாக்கியமும் இரட்சிப்பின் அதிபதியின் தியாகத்தையும் வியாகுலத்தையும்விட பெரிதாகியது. “உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக” (லூக்கா 2:14) என்று பெத்லகேமின்மேல் தொனிக்கவிருந்த அந்தப் பாடலின் முதல் அடி வானுலக பிராகாரங்களில் எதிரொலித்தது. புது சிருஷ்டிப்பைக்குறித்து மகிழ்ந்ததைக்காட்டிலும் ஒரு ஆழமான ஆனந்தத்தில் “விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்கள்” (யோபு 38:7). (9)

“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்” (ஆதி. 3:15) என்று ஆண்டவர் அறிவித்தார். தோட்டத்தில் சாத்தான்மேல் சொல்லப்பட்ட தீர்ப்பின்மூலமாக மனிதனுக்கு மீட்பின் முதல் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பு—நம்முடைய முதல் பெற்றோருடைய செவிகளில்பட அறிவிக்கப்பட்ட இந்தத் தீர்ப்பு அவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது. மனிதனுக்கும் சாத்தானுக்கும் இடையே யுத்தத்தை முன்னறிவித்த அந்த நேரத்திலேதானே, மாபெரும் எதிராளியின் வல்லமை முடிவிலே முறிக்கப்படும் என்றும் அது அறிவித்தது. ஆதாமும் ஏவாளும் நீதியுள்ள நியாயாதிபதியின் முன்பு குற்றவாளிகளாக, மீறுதல் சம்பாதித்திருந்த தீர்ப்புக்காகக் காத்திருந்தார்கள். ஆனால்

அவர்களுடைய பங்காக இருக்கவேண்டியதிருந்த உழைப்பும் வருத்தமும் நிறைந்த வாழ்க்கையைக் குறித்தாவது அல்லது அவர்கள் மண்ணுக்குத் திரும்பவேண்டும் என்கிற கட்டளையைக் குறித்தாவது கேட்பதற்கு முன்பாக, தங்களுக்கு தவறாமல் நம்பிக்கை அளிக்கிற வார்த்தைகளை அவர்கள் கவனித்தார்கள். பலமுள்ள சத்துருவின் வல்லமையினால் அவர்கள் துன்பப்படவேண்டியதிருந்தாலும் இறுதி வெற்றியை அவர்கள் எதிர்பார்த்திருக்கமுடியும். (10)

தனக்கும் ஸ்திரீக்கும் தன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை இருக்கும் என்று சாத்தான் கேட்டபோது, மனித இயல்பை தரந்தாழ்த்தும் தன் வேலையில் இடையூறு இருக்கும் என்றும், ஏதாவது வகையில் அவனுடைய வல்லமையை எதிர்க்க மனிதன் தகுதிப்படுத்தப்படுவான் என்றும் அறிந்தான். என்றபோதும் இரட்சிப்பின் திட்டம் இன்னும் முழுமையாக விளக்கப்பட்டபோது, மனிதனை விழச்செய்ததால் தேவகுமாரனையும் அவருடைய உன்னத இடத்திலிருந்து கீழே இழுக்கமுடியும் என்று அவன் தனது தூதர்களோடு களிகூர்ந்தான். இதுவரையிலும் தனது திட்டங்கள் பூமியின்மேல் வெற்றிகரமாக இருந்திருக்கிறது என்றும், கிறிஸ்து தம்மீது மனித இயல்பை எடுக்கும்போது, அவரையும் மேற்கொள்ளலாம் என்றும், இவ்வாறு விழுந்துபோன மனிதனின் மீட்பு தடுக்கப்படலாம் என்றும் அவன் அறிவித்தான். (11)

அவர்களுடைய இரட்சிப்பிற்காக வகுக்கப்பட்ட திட்டத்தை பரலோகத் தூதர்கள் நம்முடைய முதல் பெற்றோருக்கு அதிக முழுமையாகக் காண்பித்தார்கள். அவர்களுடைய பெரிய பாவம் ஒருபுறம் இருந்தபோதும், சாத்தானுடைய கட்டுப்பாட்டிற்குள் அவர்கள் விட்டுவிடப்படமாட்டார்கள் என்று ஆதாமுக்கும் அவனுடைய துணைவிக்கும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அவர்களுடைய மீறுதலுக்கான பாவ நிவாரணத்தை தம்முடைய சொந்த வாழ்க்கையினால் பரிகரிக்க தேவகுமாரன் முன்வந்திருக்கிறார்; அவர்களுக்கு ஒரு கிருபையின் காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது; மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிப்பதன்மூலமாக அவர்கள் மீண்டும் தேவனுக்கு பிள்ளைகளாகலாம். (12)

மீறுதல் கோரிய பலி, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவனுடைய பிரமாணங்களின் புனிதத்தை வெளிக்காட்டியது. பாவத்தின் குற்றத்தையும் அதன் பயங்கரமான விளைவுகளையும் இதற்குமுன் கண்டிராதவிதமாக அவர்கள் கண்டார்கள். தங்களுடைய வருத்தத்திலும் வேதனையிலும், தங்களுடைய அனைத்து மகிழ்ச்சிக்கும் ஊற்றாயிருந்த அன்பானவர்மேல் தண்டனை விழாமல், தங்கள் மேலும் தங்கள் சந்ததியின்மேலும் அது விழட்டும் என்று கெஞ்சினார்கள். (13)

பரலோக ஆட்சியிலும் பூமியிலுங்கூட யெகோவாவின் பிரமாணங்களே அஸ்திபாரமாக இருக்கிறதால், ஒரு தூதனின் ஜீவன்கூட அதை மீறினதற்கான பலியாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாது என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. விழுந்துபோன நிலையில் மனிதனைச் சந்திக்க அதன் கட்டளைகளில் ஒன்றுகூட நீக்கப்படவோ, அல்லது மாற்றப்படவோ முடியாது. ஆனால் அவர்களை சிருஷ்டித்த தேவகுமாரன் அவனுக்காக பரிகாரம் செய்யமுடியும். ஆதாமின் மீறுதல் அவலத்தையும் மரணத்தையும் கொண்டுவந்ததுபோல, கிறிஸ்துவின் தியாகம் ஜீவனையும் அழியாமையையும் கொண்டுவரும். (14)

மனிதன் மாத்திரமல்ல, பூமியும் பாவத்தினால் பொல்லாங்கனுடைய வல்லமையின்கீழ் வந்தது. எனவே அதுவும் மீட்பின் திட்டத்தினால் மீண்டும் நிறுத்தப்படவேண்டும். சிருஷ்டிப்பில் ஆதாம் பூமியின்மேல் அதிகாரியாக அமர்த்தப்பட்டான். ஆனால் சோதனையில் விழுந்ததினிமித்தம், அவன் சாத்தானின் வல்லமையின்கீழ் கொண்டுவரப்பட்டான். “எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே” (2 பேதுரு 2:19). மனிதன் சாத்தானுடைய கைதியானபோது, அவன் கொண்டிருந்த ஆளுகை அவனை வெற்றிகொண்டவனிடம் கடந்துபோனது. இவ்வாறாக சாத்தான் “உலகத்தின் தேவனானான்” (2 கொரி. 4:4). ஆதாமுக்கு முதலில் கொடுக்கப்பட்டிருந்த பூமியின்மேலிருந்த அதிகாரத்தை அவன் பறித்துக்கொண்டான். ஆனால் கிறிஸ்து, தமது தியாகத்தின்மூலமாக பாவத்தின் அபராதத்தைச் செலுத்தி, மனிதனை மாத்திரமல்ல, அவன் இழந்துபோன அதிகாரத்தையும் மீட்டெடுக்கிறார். முதல் ஆதாமினால் தொலைக்கப்பட்ட அனைத்தும் இரண்டாம் ஆதாமினால் மீண்டும் திருப்பப்படும். “மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்” (மீகா 4:8) என்று தீர்க்கதரிசி கூறுகிறான். “அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்” (எபே. 1:14) என்கிறதை அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டுகிறார். பரிசுத்தமான மகிழ்ச்சியான குடிகளின் இல்லமாக இருக்கும்படி தேவன் பூமியை சிருஷ்டித்தார். “பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர்” (ஏசாயா 45:18). தேவனுடைய வல்லமையினால் புதுப்பிக்கப்பட்டு. பாவம் மற்றும் துன்பத்திலிருந்து விடுவிக்கப்படும்போது, அந்த நோக்கம் நிறைவேறும். இப்பூமி மீட்கப்பட்டோரின் நித்திய இல்லமாகும். “நீதிமான்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு, என்றைக்கும் அதிலே வாசமாயிருப்பார்கள்.” “இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்”—சங்கீதம் 37:29; வெளி. 22:3. (15)

ஆதாம் தன் குற்றமின்மையில் தன்னை உண்டாக்கினவரோடிருந்த திறந்த உறவில் மகிழ்ந்திருந்தான். ஆனால் பாவம் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே பிரிவினையைக் கொண்டுவந்தது. கிறிஸ்துவின் பரிகாரம் மாத்திரமே இந்தப் பிளவில் நின்று பரலோகத்துக்கும் பூமிக்கும் இடையே பாக்கியமான அல்லது இரட்சிப்பின் தொடர்பை உண்டுபண்ணக்கூடும். மனிதன் இன்னமும் தன் சிருஷ்டிகரின் நேரடியான தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறான். ஆனால் தேவன் கிறிஸ்துவின் மூலமாகவும் தூதர்களின் மூலமாகவும் அவனோடு தொடர்புகொள்ளுவார். (16)

ஏதேனில் தெய்வீக நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டதிலிருந்து ஜலப்பிரளயம்வரைக்கும், அதன்பின் தேவகுமாரனுடைய முதல் வருகை வரைக்குமான மனித இனத்தின் சரித்திரத்திலிருந்த முக்கியமான சம்பவங்கள் ஆதாமுக்கு வெளிப்படுத்தப்பட்டது. உலகம் முழுவதையும் இரட்சிக்க கிறிஸ்துவின் தியாகம் போதுமானதாயிருந்தபோதும், மனம் வருந்தி கீழ்ப்படிவதைக் காட்டிலும் பாவ வாழ்க்கையையே அநேகர் தெரிந்துகொள்ளுவார்களென்பது அவனுக்குக் காண்பிக்கப்பட்டது. அடுத்தடுத்த தலைமுறைகளில் குற்றங்கள் அதிகரிக்கும். பாவத்தின் சாபம் மனித இனத்தின்மேலும் மிருகங்கள்மேலும் பூமியின்மேலும் அதிக பாரமாகத் தங்கும். மனிதனுடைய சொந்த பாவ வாழ்க்கையினால் அவனுடைய நாட்கள் குறைக்கப்படும். இந்த உலகம் அனைத்துவிதமான துன்பங்களாலும் நிரம்பும்வரையிலும் அவன் தன்னுடைய சரீர வளர்ச்சியிலும் தாங்கும் தன்மையிலும் சன்மார்க்க அறிவுசார்ந்த வல்லமைகளிலும் சீரழிந்துகொண்டே வருவான். உணவிலும் உணர்ச்சியிலும் திளைப்பதினால் மனிதன் இரட்சிப்பின் திட்டத்தினுடைய மாபெரும் உண்மைகளை போற்றும் தகுதியற்றவனாகிவிடுவான். என்றாலும், எதற்காக கிறிஸ்து பரலோகத்தைத் துறந்தாரோ, அந்த நோக்கத்தில் உண்மையாயிருந்து, மனிதனின்மேல் தொடர்ந்து விருப்பம் காண்பித்து, அவர்கள் தங்களுடைய பெலவீனங்களையும் குறைகளையும் அவரில் மறைத்துக்கொள்ளும்படி இன்னும் அழைப்பார். விசுவாசத்தோடு அவரிடம் வருகிற அனைவருடைய தேவைகளையும் அவர் வழங்குவார். நிலவுகிற அக்கிரமத்திற்கு மத்தியிலும் கறைபடாதவர்களாக, தேவனைக்குறித்த அறிவைப் பாதுகாக்கும் சிலர் இருப்பார்கள். (17)

மனிதனுடைய பாவத்தைக்குறித்த நிலையான நினைப்பூட்டுதலாகவும், அதைக்குறித்த மனவருத்தத்தின் அடையாளமாகவும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற மீட்பரின் மேலிருக்கும் விசுவாச அறிக்கையாகவும் பலியின் காணிக்கைகள் தேவனால் அவனுக்கு நியமிக்கப்பட்டது. பாவமே மரணத்தைக் கொண்டுவந்தது என்கிற பவித்திரமான உண்மையை

விழுந்துபோன மனிதனில் பதிக்கும் நோக்கத்தை அவைகள் கொண்டிருந்தன. முதலில் செலுத்தப்பட்ட பலி ஆதாமிற்கு மிக அதிக வேதனையைக் கொடுத்த சடங்காக இருந்தது. தேவன் மாத்திரமே கொடுக்கக்கூடிய உயிரை எடுக்கும்படியாக அவன் கைகள் உயர்த்தப்படவேண்டும். அதுதான் அவன் முதல்முறையாக கண்ட மரணம். அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருந்திருந்தால் மனிதனோ அல்லது மிருகமோ மரித்திருக்காது என்று அவன் அறிந்திருந்தான். குற்றமில்லாத உயிரைக் கொன்றபோது, அவனுடைய பாவம் கறையில்லாத தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை சிந்த வேண்டியதிருக்கும் என்கிறதை நினைத்து நடுங்கினான். இந்தக் காட்சி, தேவனுடைய நேசக்குமாரனுடைய மரணம் மாத்திரமே ஈடுகட்டக்கூடிய அவனுடைய மாபெரும் மீறதலைக்குறித்த ஆழமான மிகத் தெளிவான உணர்வை அவனுக்குக் கொடுத்தது. குற்றவாளியை இரட்சிக்கும்படியாக இத்தனை பெரிய விலைக்கிரயத்தை கொடுக்கக்கூடிய முடிவில்லாத நற்குணத்தைக்கண்டு வியந்தான். இருண்ட பயங்கரமான எதிர்காலத்தை ஒரு நம்பிக்கையின் நட்சத்திரம் ஒளிப்படுத்தி, அதனுடைய அழிவிலிருந்து அதை விடுவித்தது. (18)

மனிதனுடைய மீட்பைக்காட்டிலும் இன்னும் அகலமான ஆழமான நோக்கத்தை மீட்பின் திட்டம் கொண்டிருந்தது. இதற்காக மாத்திரம் கிறிஸ்து பூமிக்கு வரவில்லை. இந்தச் சிறிய உலகவாசிகள் தேவனுடைய பிரமாணத்தை கனப்படுத்தவேண்டியபிரகாரம் கனப்படுத்தவேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, தேவனுடைய குணத்தை அண்ட சராசரத்தின்முன் நிலைநிறுத்தவும் அவர் வந்தார். “இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” (யோவான் 12:31,32) என்று தமது சிலுவை மரணத்திற்கு சற்றுமுன் இரட்சகர் கூறியபோது, தமது மாபெரும் தியாகத்தின் இந்த விளைவையும், மற்ற உலகங்களின் அறிவுஜீவிகள்மேலும் மனிதன்மேலும் இது ஏற்படுத்தவிருக்கும் பாதிப்பையும் அவர் எதிர்நோக்கியிருந்தார். மனிதனுடைய இரட்சிப்பிற்காக மரிக்கும் கிறிஸ்துவின் செயல், மனிதனுக்குப் பரலோகத்தை கொடுப்பது மாத்திரமல்லாது, அண்டசராசரத்தின் முன்பும், சாத்தானுடைய மீறுதலை சந்தித்ததில் தேவனும் அவருடைய குமாரனும் நீதியுள்ளவர்கள் என்றும் நிரூபிக்கும். இது தேவனுடைய பிரமாணத்தின் அழியாத்தன்மையை நிலைநிறுத்தி, பாவத்தின் இயல்பையும் அதன் விளைவுகளையும் வெளிப்படுத்தும். (19)

ஆரம்பத்திலிருந்தே மாபெரும் போராட்டம் தேவனுடைய பிரமாணங்களின்மேலேயே இருந்தது. தேவன் அநீதியுள்ளவரென்றும், அவருடைய பிரமாணம் குறையானது என்றும், பிரபஞ்சத்தின் நன்மைக்காக அது மாற்றப்படவேண்டும் என்றும் நிரூபிக்க சாத்தான் வகைதேடினான். பிரமாணத்தைத் தாக்குவதினால், அதை உண்டாக்கினவரின் அதிகாரத்தைக் கவிழ்ப்பதை அவன் குறிவைத்தான். இந்தப் போராட்டத்தில் தெய்வீகப் பிரமாணங்கள் குறைவுள்ளவையா, மாற்றப்படவேண்டியவையா அல்லது பூரணமானதா, மாறாததா என்பது காண்பிக்கப்படவேண்டும். (20)

பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டபோது, இந்த பூமியைத் தன்னுடைய இராஜ்யமாக்க சாத்தான் தீர்மானங்கொண்டான். ஆதாமையும் ஏவாளையும் சோதித்து வெற்றிகொண்டபோது அவர்கள் தங்களுடைய அதிபதியாக என்னைத் தெரிந்துகொண்டார்கள் என்று சொல்லி, இந்த உலகத்தை சொந்தமாக்கிக்கொண்டதாக அவன் நினைத்தான். பாவிக்கு மன்னிப்பை அருளுவது கூடாதகாரியம் என்றும், விழுந்துபோன இனம் தனக்குச் சொந்தமானது என்றும், இந்த உலகம் தன்னுடையதென்றும் உரிமை கோரினான். ஆனால் தேவன் தம்முடைய சொந்த நேசக்குமாரனை—தமக்கு இணையானவரை மீறுதலின் தண்டனையை சுமக்கும்படியாகக் கொடுத்தார். இவ்வாறாக, அவர்கள் அவருடைய தயவில் நிலைநிறுத்தப்படவும், ஏதேன் தோட்டத்திற்குள் மீண்டும் கொண்டுவரப்படவும் ஒரு வழியை உண்டாக்கினார். மனிதனை மீட்டு, சாத்தானின் பிடியிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற கிறிஸ்து தலையிட்டார். பரலோகத்தில் துவங்கின மாபெரும் போராட்டம், சாத்தான் தன்னுடையதென்று உரிமைபாராட்டிய அதே உலகத்தில்—அதே களத்தில் தீர்மானிக்கப்படவேண்டும். (21)

விழுந்துபோன மனிதனை இரட்சிக்க கிறிஸ்து தம்மைத் தாழ்த்துவார் என்பது முழு பிரபஞ்சத்திற்கும் வியப்பாக இருந்தது. நட்சத்திரத்திலிருந்து நட்சத்திரத்திற்கும், உலகத்திலிருந்து உலகத்திற்கும் சென்று, அனைத்தையும் மேற்பார்வையிட்டு, தமது ஏற்பாட்டினால், தமது பரந்த சிருஷ்டிப்பின் ஒவ்வொரு வாசியின் தேவைகளையும் வழங்கிவரும் அவர்— தமது மகிமையைத் துறந்து மனித இயல்பை தம்மீது எடுத்துக்கொள்ள இறங்குவது, பாவமில்லாத மற்ற உலகவாசிகள் புரிந்துகொள்ள வாஞ்சித்த இரகசியமாக இருந்தது. கிறிஸ்து மனித உருவில் நம்முடைய உலகத்திற்கு வந்தபோது, முன்னணையிலிருந்து கல்வாரிவரையிலான இரத்தக்கறைபடிந்த பாதையில் அவர் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியிலும் அவரைப் பின்தொடர அனைவரும் ஊக்கமான ஆர்வத்தோடு இருந்தனர். அவர் அடைந்த அவமானத்தையும் நிந்தையையும் பரலோகம் குறித்து வைத்தது. அது சாத்தானுடைய தூண்டுதல் என்பதையும்

அறிந்திருந்தது. எதிர்முகவர்கள் முன்வந்து செய்த செயல்களை அவர்கள் குறித்து வைத்தார்கள். சாத்தான் மனித இனத்தின்மீது தொடர்ச்சியாக இருளையும் துயரத்தையும் வேதனையையும் திணித்துக்கொண்டிருப்பதையும் கிறிஸ்து அதற்கு எதிராகச் செயல்படுவதையும் குறித்தார்கள். ஒளிக்கும் இருளுக்கும் இடையேயான யுத்தம் பலமடைந்ததை கவனித்திருந்தார்கள். முடிந்துகொண்டிருந்த வேதனையில் "எல்லாம் முடிந்தது" (யோவான் 19:30) என்று சிலுவையின்மீது கிறிஸ்து குரல் கொடுத்தபோது, ஒரு வெற்றி முழக்கம் ஒவ்வொரு உலகத்திலும் பரலோகத்திலுந்தானும் முழங்கியது. இந்த உலகில் அதிக காலம் நடந்துகொண்டிருந்த மாபெரும் போராட்டம் இப்போது தீர்மானிக்கப்பட்டது. கிறிஸ்து வெற்றி சிறந்தார். சுயத்தை மறுக்கவும் தியாகத்தின் ஆவியைச் செயல்படுத்தவும் போதுமான அன்பை பிதாவும் குமாரனும் மனிதன்மேல் வைத்திருந்தார்களா என்ற கேள்விக்கு, அவருடைய மரணம் பதில் கொடுத்தது. சாத்தான் பொய்காரனும் கொலைகாரனுமாக தன்னுடைய உண்மையான குணத்தை வெளிக்காட்டினான். அவனுடைய வல்லமையின் கீழிருந்த மனிதர்களை எந்த ஆவியில் ஆண்டானோ, அதே ஆவியை, பரலோகவாசிகளைக் கட்டுப்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தால் அவன் வெளிக்காட்டியிருப்பான் என்பது காணப்பட்டது. தெய்வீக அரசாங்கத்தை துதிக்கும்படியாக பிரபஞ்சம் முழுவதும் ஒருமனப்பட்டு இணைந்தது. (22)

பிரமாணம் மாற்றப்படக்கூடுமானால், கிறிஸ்துவின் தியாகபலி இல்லாமலேயே மனிதன் இரட்சிக்கப்பட்டிருப்பான். ஆனால் விழுந்தபோன இனத்திற்காக கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுப்பது அவசியம் என்ற உண்மை, தேவனுடைய பிரமாணம் பாவியின்மேல் கொண்டிருக்கும் தன்னுடைய பிடியை தளர்த்தாது என்கிறதை நிரூபிக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்கிறதை அது விளக்கிக்காட்டியது. கிறிஸ்து மரித்தபோது சாத்தானின் அழிவு உறுதியாயிற்று. ஆனால் அநேகர் கூறுவதைப்போல பிரமாணம் சிலுவையிலே ஒழிந்துபோயிருக்குமென்றால், தேவனுடைய நேசகுமாரன் சகித்த வேதனையும் மரணமும் சாத்தானுக்கு அவனுக்கு வேண்டியதை கொடுக்கமாத்திரமே இருந்திருக்கும். அப்போது தீமையின் அதிபதி வெற்றிகொண்டிருப்பான். தெய்வீக அரசாங்கத்திற்கு எதிரான அவனுடைய குற்றச்சாட்டு நிலையானதாகியிருக்கும். மனிதனுடைய மீறுதலின் தண்டனையை கிறிஸ்து சுமந்தார் என்கிற உண்மை, பிரமாணம் மாற்றப்படமுடியாது என்பதற்கும், தேவன் நீதிபரர் இரக்கமுள்ளவர் சுயத்தை மறுக்கிறவர் என்பதற்கும், அவருடைய நிர்வாகத்தில் நித்திய நீதியும் கிருபையும் இணைந்திருக்கிறது என்பதற்குமான வல்லமையான வாதமாக அனைத்து சிருஷ்டிகளுக்கும் இருக்கிறது. ★ (23)